செய்தி வெளியீட்டு எண்.156 நாள்.17.03.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இலவச வீட்டு மனை பட்டாவினை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ. ஏழுமலை ஆகியோர் வழங்கினார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இலவச வீட்டு மனை பட்டாவினை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ. ஏழுமலை ஆகியோர் இன்று (17.03.2017) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் வட்டம் இராமஞ்சேரி, பட்டரைபெரும்புதூர், இரங்காபுரம், கீழ்விளாகம், களியனூர், கைவண்டூர், பாண்டூர் மற்றும் சேத்துப்பாக்கம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 160 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது “திருவள்ளூர் வட்டத்தை சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் அரசின் சார்பாக வழங்கப்படுகிறது. பட்டா பெற்றவர்கள் அந்த இடங்களை கண்டறிந்து குடியேறுவதற்கான வழிமுறைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். பட்டா பெற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக விண்ணப்பம் செய்த உடன் ஒவ்வொருவருக்கும் ரூபாய். ஒரு லட்சத்தி 70 ஆயிரத்திற்கான உதவிகள் வழங்கப்படுகிறது.

தனிநபர் கழிவறை கட்டுவதற்கு அரசு ஒவ்வொருவருக்கும் ரூ.12,000 வழங்கி வருகிறது. இதனை பெற்று அனைத்து வீடுகளிலும் தனிநபர் கழிவறை கட்ட வேண்டும். திறந்த வெளியில் மலம் கழிக்காத ஊராட்சியாக அனைத்து ஊராட்சியும் திகழ வேண்டும். குடிநீர் தட்டுப்பாடு குறித்து புகார்களை தெரிவிக்க 1077 என்ற எண்ணை தொடர்பு கொண்டு மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறையில் புகார்களை தெரிவிக்கலாம். மக்கள் அனைவரும் தண்ணீர் பயன்பாட்டினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். மழை பெய்யாத காரணத்தினால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. எனவே அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்” என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ.ஏழுமலை, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்ய ஸ்ரீ, திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி. கார்குழலி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~